بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 19/01/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## உஹுது போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களைப் பற்றிய எடுத்துரைப்பு மற்றும் பாலஸ்தீனுக்காக துஆவிற்கான வலியுறுத்தல்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

உஹுது போர் பற்றி கூறப்பட்டு வருகிறது. இது தொடர்பாக மேற்கொண்டு எடுத்துக் கூறுவேன். இதற்கு முன்னரும் கூறப்பட்டிருந்தது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகி விட்டதாக எதிரி அறிவிப்பு செய்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆனதாகக் கூறப்பட்ட இந்த செய்தியை ஒருவன் பிரசித்திபடுத்திய போது, அதை முஸ்லிம்கள் கேட்டதும் முஸ்லிம்களின் நிலை என்ன ஆனது என்பதைப் பற்றிய விளக்கத்தில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

இப்னு கமிய்யா, தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஷஹீது ஆக்கி விட்டதாகக் கருதிய போது, அவன் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகி விட்டார்கள் என்று அறிவிப்பு செய்து விட்டான். அறிவிப்பு செய்தவன் ஷைத்தான் என்றும் கூறப்படுகிறது. அறிவிப்பு செய்தது யார் என்பது பற்றி பல கூற்றுகள் உள்ளன. ஒருவேளை பல்வேறு மக்கள் செய்திருக்கலாம். ஷைத்தானிய இயல்பு உடைய எந்த மனிதனும் இந்த அறிவிப்பை செய்திருக்கலாம்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீனில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:** அப்பொழுது முஸ்லிம்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்திருந்தார்கள். ஒரு குழுவோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு போர்க்களத்தில் இருந்து ஓடி விட்டது. அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். ஆனால், அந்த நேரத்தின் குறிப்பிட்ட நிலைமைகள், மக்களின் உள்ளத்து ஈமான் மற்றும் கலப்பற்ற தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு எல்லாம் வல்ல

அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. அந்த மக்களில் சிலர் மதீனா வரை சென்றடைந்தார்கள்.

இவ்வாறு மதீனாவிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) சிந்தனையும், இஸ்லாமிய படை தோல்வியடைந்த செய்தியும் சென்றடைந்து விட்டது. அதனால் நகரம் முழுவதிலும் ஓர் அமளி ஏற்பட்டு விட்டது. முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உஹுது களத்தை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். சிலர் ஓடிச் சென்று போர்க்களத்தை அடைந்தார்கள். மேலும், அல்லாஹ்வின் பெயரைக் கூறி எதிரிகளின் அணிகளுக்குள் நுழைந்து விட்டார்கள்.

இரண்டாவது குழுவில் இருந்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு சண்டையிடுவதை வீணானதாகக் கருதினார்கள். மேலும், ஒருபுறம் அகன்று கவலைத் தோய்ந்து அமர்ந்து விட்டார்கள். மூன்றாவது குழுவோ தொடர்ச்சியாகப் போரிட்டுக் கொண்டிருந்தது. அவர்களில் சிலரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று கூடியிருந்தார்கள். மேலும், நிகரில்லா வாழ்வை அர்ப்பணித்தலின் திறமையை வெளிபடுத்திக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலானவர்களோ போர்க்களத்தில் கலைந்து போய் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்த மக்களுக்கும், இரண்டாவது குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரோடு இருப்பது தெரிய வர தெரிய வர, இந்த மக்கள் பித்தர்களைப் போன்று சண்டையிட்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒன்றுகூடி வந்தனர். அப்பொழுது போரின் நிலைமை எப்படி இருந்ததென்றால், குறைஷியர்களின் படை கடலின் அச்சுறுத்தும் அலைகளைப் போல் நாலாபுறத்திலிருந்தும் முன்னோக்கி வந்து கொண்டிருந்தது. போர்க்களத்தில் எல்லாப் பக்கத்தில் இருந்தும் அம்புகளும் கற்களும் மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன.

வாழ்வை அர்ப்பணிக்கக்கூடியவர்கள் இந்த ஆபத்தான நிலையைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி வட்டமிட்டு அன்னாருடைய அருளுக்குரிய உடலைத் தம்முடைய உடல்களால் மறைத்துக் கொண்டார்கள். ஆயினும், தாக்குதலின் பொறி கிளம்பிய போதெல்லாம், விரல் விட்டு எண்ணக்கூடிய இந்த சில பேர் அக்கம் பக்கம் தள்ளிவிடப்பட்டு வந்தார்கள். இத்தகைய நிலைமையில், சில வேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிட்டத்தட்ட தனியாக இருந்து விடுவார்கள்.

இப்படிப்பட்ட ஒரு தருணத்திலேயே ஹஸ்ரத் சஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களின் முஷ்ரிக் சகோதரன் உத்பா பின் அபீ வக்காஸ் எறிந்த ஒரு கல் ஹுஸூர் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய முகத்தில் பட்டது. அதனால் அன்னாருடைய அருளுக்குரிய பல் ஒன்று உடைந்து விட்டது. உதடும் காயமடைந்தது. அப்துல்லாஹ் பின் ஷிஹாப் எறிந்த இன்னொரு கல்

அன்னாருடைய நெற்றியைக் காயப்படுத்தியது. சிறிது நேரத்திற்குப் பிறகு, இப்னு கமிய்யா எறிந்த மூன்றாவது கல் அன்னாருடைய அருளுக்குரிய கன்னத்தில் வந்து பட்டது. அதனால், அன்னாருடைய மஃக்ஃபர், அதாவது, இரும்புத் தலைக்கவசத்தின் இரண்டு இரும்புச் சங்கிலிகள் அன்னாருடைய கன்னத்தில் குத்திக் கொண்டு இருந்து விட்டன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான தத்துவம் பற்றிய கருத்தை எடுத்துரைக்கிறார்கள். இதை எடுத்துரைத்தவாறு ஒரு நீண்ட விளக்கத்துடன் அன்னார் உஹுதின் இந்த சம்பவத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஈரான் பேரரசன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பிடிக்க எண்ணினான். ஆனால், பிடிப்பவர்கள் கூட வந்திருக்கவில்லை; தூதுச் செய்தியை மட்டும் எடுத்துக் கொண்டு ஏமனின் ஆளுநரின் ஆட்கள் தான் வந்தடைந்திருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களிடம், ‘சென்று உங்கள் எஜமானனிடம் நாம் வரவில்லை என்று கூறுங்கள். உங்கள் இறைவனை எங்கள் இறைவன் கொன்று விட்டான்’ என்று கூறினார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அந்த அரசனின் மகனை இயக்கினான். அவன் தன் தந்தையைக் கொன்று விட்டான். ஆனால், உஹுது போரில் எதிரி அன்னார் மீது தாக்குதல் தொடுத்தான். கற்கள் எறிந்தான். அன்னாருடைய பற்கள் உடைந்து விட்டன. தலை காயமடைந்தது. இரும்புத் தலைக்கவசத்தின் ஆணிகள் தலையில் குத்திக் கொண்டன. அன்னார் மயங்கி விழுந்தார்கள். அன்னார் ஷஹீது ஆகி விட்டார்கள் என்று கருதப்பட்டது.

‘எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்காக ஈரானின் பேரரசனை அவ்வளவு தொலைவில் மரணிக்க வைத்து விட்டான். அந்த அளவுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு அன்னாரின் கண்ணியம் விருப்பமானதாக இருந்தது என்றால், ஏன் அவன் உஹுது போர்க்களத்தில் காஃபிர்களை அன்னார் மீது இப்படி கல் எறிய விட்டான்?’ என்று இப்பொழுது ஒருவர் கூறினால், இவ்வாறு ஆட்சேபனைகள் செய்வது சரியல்ல. இவை, எல்லாம் வல்ல அல்லாஹ் சந்தர்ப்ப சூழ்நிலைக்குப் பொருத்தமாகவும் நுட்பமாகவும் செய்பவை ஆகும். இவை இரகசியங்கள் ஆகும்.

சில சந்தர்ப்பங்களில் அவன் சின்ன விஷயத்தில் பிடித்து விடுகிறான். சிலவேளை மனிதனின் இயலாமையும் திறமையின்மையும் வெளிப்பட வேண்டும் என்பதற்காக, ஏதாவது ஒரு நன்மையைக் கருதி கால அவகாசம் கொடுக்கிறான். எவ்வாறு இருப்பினும், இந்த சம்பவம் போய்க் கொண்டிருக்கிறது. கொலை வதந்திக்குப் பிறகு, திடீரென்று சஹாபா பெருமக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் காணக் கிடைக்கவும் பெற்றார்கள். இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அந்த நேரத்தில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை, அன்னார் உயிருடன் நலமாக இருக்கிறார்கள் என்று எல்லாருக்கும் முதலாக அடையாளம் கண்டு கொண்ட முதல் நபர், ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அன்னாருடைய கண்களை வைத்து அடையாளம் கண்டு கொண்டேன். அவை தலைக்கவசத்தின் கீழ் ஒளிமிக்கவையாக, ஒளிரக்கூடியவையாகத் தென்பட்டுக் கொண்டிருந்தன.

முஸ்லிம்களுக்குத் தகவல் கிடைக்க கிடைக்க அனைவரும் ஹுஸூர் (ஸல்) அவர்களை நோக்கி ஓடி வந்தார்கள். முஸ்லிம்கள் அனைவரும் ஹுஸூர் (ஸல்) அவர்களைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டதும், அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி விட்டில் பூச்சிகளைப் போன்று ஒன்றுகூடி விட்டார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்:** குறைஷியர்கள் சற்று பின்னால் விலகியதும், போர்க்களத்தில் இருந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டு அன்னாரைச் சுற்றி ஒன்று திரண்டு விட்டார்கள். அப்பொழுது ஹுஸூர் (ஸல்) அவர்கள் தம்முடைய அந்த சஹாபாவுடன் சேர்ந்து மெல்ல மெல்ல மலை மீது ஏறி ஒரு பாதுகாப்பான குன்றைச் சென்றடைந்தார்கள்.

வழியில் மக்காவின் ஒரு தலைவன் உபை பின் ஃஹல்ஃபின் பார்வை அன்னார் மீது பட்டது. அவன் உள்ளப்பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியில் குருடனாகி, 'لَانَجَوْتُ اِنْ نَجَا அதாவது, முஹம்மது {(ஸல்) அவர்கள்)} தப்பி ஓடி விட்டார் என்றால், நான் தப்பவில்லை' என்ற சொற்களைக் கூறிக் கொண்டே அன்னார் பக்கம் ஓடினான். சஹாபா அவனைத் தடுக்க நினைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அவனை விட்டு விடுங்கள். என் பக்கம் வர விடுங்கள்' என்று கூறினார்கள்.

அவன் ஹுஸூர் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கத்தில் அன்னாருக்கு அருகில் வந்தடைந்த போது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஓர் ஈட்டியை எடுத்து அவன் மீது வீசினார்கள். அதனால் அவன் தலைசுற்றி மண்ணில் விழுந்தான். பிறகு, எழுந்து கத்திக் கூச்சலிட்டுக் கொண்டே திரும்பிச் சென்று விட்டான். வெளிப்படையில், காயம் பெரிதானதாக இருக்கவில்லைதான்; ஆனால், மக்கா சென்றடைவதற்கு முன் அவன் மண்ணில் கலந்து விட்டான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மலைக் குன்றை சென்றடைந்ததும் காலித் பின் வலீது தலைமையில் குறைஷியர்களின் ஒரு படைக்குழு மலை மீது ஏறி தாக்குதல் தொடுக்க நினைத்தது. ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையால் ஹஸ்ரத் உமர்

(ரலி) அவர்கள் சில முஹாஜிர்களை உடன் அழைத்துக் கொண்டு அதை எதிர்த்துப் போரிட்டு அதைப் பின்னுக்குத் தள்ளி விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பாறை மீது ஏற நினைத்தபோது, அருளுக்குரிய தலையின் காயத்தில் இருந்து இரத்தம் வழிந்ததன் காரணமாகவும், பலவீனம் காரணமாகவும் ஆற்றல் இருக்கவில்லை. இதைப் பார்த்த ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைத் தோளில் அமர வைத்து பாறைக்கு மேல் தூக்கிச் சென்றார்கள். அப்பொழுதே பெருமானார் (ஸல்) அவர்கள் 'அவர் மீது சொர்க்கம் கடமையாகி விட்டது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஹுது நாளைப் பற்றி கூறுகையில், 'அந்த நாள் முழுக்க முழுக்க தல்ஹாவுடைய நாளாக இருந்தது' என்று கூறுவார்கள்.

உஹுது போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக புகாரியின் அறிவிப்பு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் காயத்தைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கேடயத்தால் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். தண்ணீர் இன்னும் அதிகம் இரத்தத்தை வெளியேற்றுகிறது என்பதை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பார்த்த போது, அவர்கள் சாக்குபையின் ஒரு துண்டை எரித்து, அத்துடன் சேர்த்து ஒட்டி விட்டார்கள். அதனால் இரத்தம் நின்று விட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'தன்னுடைய நபியைக் காயமடையச் செய்த, அவருடைய நான்காவது பல்லை (அதாவது முன்னிரு பற்களுக்கும் கூரான பல்லுக்கும் நடுவில் உள்ள பல்லை) உடைத்த அந்த சமுதாயம் எப்படி வெற்றி பெற முடியும்? அவரோ அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறார்' என்று கூறினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாலஸ்தீனத்துக்காக துஆக்களுக்காக வலியுறுத்தியவாறு கூறினார்கள்:*

நான் பாலஸ்தீனத்துக்காக துஆக்கள் செய்யுமாறு கூறிக் கொண்டே இருக்கிறேன். இப்பொழுது முஸ்லிம் நாடுகளின் நிலை எப்படி ஆகிவிட்டது என்றால், அனைவரும் ஒன்று சேர்ந்து பாலஸ்தீனத்தைக் காப்பாற்றுவது பற்றி கவலைபடுவதற்கு பதிலாக முஸ்லிம்களே சண்டையிட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இப்பொழுது பாக்கிஸ்தான் மற்றும் ஈரானிலும் சச்சரவு ஆரம்பித்து விட்டதாக கேள்விப்படுகிறேன். இவர்கள் ஒருவர் மற்றவர் மீது குண்டுகளும் வீசியுள்ளார்கள். ஆக, இது பயங்கரமான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ்வே இந்த முஸ்லிம் நாடுகளுக்கு, தலைவர்களுக்கு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக! இவர்களுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உண்மையில், இவர்களுக்குத் தங்களுடைய நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இவர்கள் ஒரே உம்மத்தாக ஆகக்கூடியவர்களாக இருப்பார்களாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு காயிப் ஜனாஸாவும் தொழ வைப்பேன். முதலாவது, சய்யித் தாவூத் முஸஃப்பர் ஷாஹ் சாஹிபின் மகனான சய்யித் மௌலூது அஹ்மத் சாஹிப் அவர்களுடையது. இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் மற்றும் சய்யிதா உம்மே தாஹிர் சாஹிபாவின் மகள்வழிப் பேரரும், என் தாயின் சகோதரி மகனாகவும், என் மனைவியின் அண்ணனாகவும் இருந்தார்கள்.

இரண்டாவது ஜனாஸா அக்மீது ஆஃக் முஹம்மது சாஹிப் அவர்களுடையது. இவர்கள் புர்கினாஃபாஸோவின் டோரீ மண்டலத்தின் மஹ்தியாபாத் ஜமாஅத்தின் சத்ர் ஆவார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் சந்ததிகளுக்கும் இவர்களுடன் தொடர்பு வைத்திருப்பவர்களுக்கும் பொறுமை மற்றும் மனதைரியத்தை வழங்குவானாக! இவர்களுடைய நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)